©
தமிழ்நாடு அரசு
2017

[பதிவு எண். தநா/சிசிஎன்/467/2012–14
[நிமு. எண். 197/2009
[விலை ரூ. 1.60 பைசா

# தமிழ்நாடு அரசு அரசிதழ்

**அசாதாரணம்** அதிகாரப்பூர்வமாக வெளியிடப்பட்டது

எண்.336அ] சென்னை, புதன்கிழமை, அக்டோபர் 18, 2017

ஐப்பசி 1, ஹேவிளம்பி, திருவள்ளுவர் ஆண்டு –2048

**பகுதி II – பிரிவு 2**

**தலைமைச் செயலகத் துறைகளால் வெளியிடப்பட்ட பொதுமக்களில் ஒரு பிரிவினரின் நலனுக்கான அறிவிக்கைகள் அல்லது ஆணைகள்**

**அரசின்அறிவிக்கைகள்**

## வணிகவரிகள் மற்றும் பதிவுத் துறை

தமிழ்நாடு சரக்குகள் மற்றும் சேவைகள் வரிச் சட்டம், 2017–ன் கீழ் அறிவிக்கைகள்

**சட்டத்தின் கீழ் சமுதாயத்தில் பொருளாதாரத்தில் நலிவடைந்த பிரிவினருக்கு இலவசமாக பகிர்ந்தளிப்பதற்கான உணவு தயாரிப்புகளுக்கான மாநிலவரி வீதம்**

*[அ.ஆ.நிலை எண்140 வணிகவரிகள் மற்றும் பதிவுத்துறை (ஆ1),17 அக்டோபர் 2017,*

*புரட்டாசி 31 ஹேவிளம்பி, திருவள்ளுவர் ஆண்டு – 2048]*

**எண். II(2)/வவப/868(ஊ-1)/2017**

தமிழ்நாடு சரக்குகள் மற்றும் சேவைகள் வரிச் சட்டம் 2017ன் (தமிழ்நாடு சட்டம் 2017ன் 19ல் ) பிரிவு –9 உட்பிரிவு (1)ன் கீழ் அளிக்கப்பட்ட அதிகாரங்களை நடைமுறைப்படுத்தி, குழுவின் பரிந்துரைகளின் படி, தமிழ்நாடு ஆளுநரால், மாநிலத்திற்குள் வழங்கப்படும் சரக்குகளின் மீது 2.5 சதவிகிதம் மாநில வரி வீதம் இதன் மூலம் அறிவிக்கப் பட்டு, கீழ்காணும் அட்டவணையில் நிரல் 3ல் குறிப்பிட்டுள்ள விவரிப்பின் படி, கட்டண வீதப்பட்டியல் இனத்தின் கீழ் வரும் துணை தலைப்பு, தலைப்பு அல்லது அத்தியாயம், நேர்விற்கேற்ப, கீழ்காணும் அட்டவணையின் நிரல் (4)ல் குறிப்பிடப்பட்ட நிபந்தனைக்கு உட்பட்டு நிரல்–2ன் தொடர்புடைய பதிவில் குறிப்பிடப் பட்டுள்ளது, அதாவது:–

| வ. எண். | கட்டண வீதப்பட்டியல் இனம், துணை தலைப்பு, தலைப்பு அல்லது அத்தியாயம் | பொருட்களின் விவரிப்பு | நிபந்தனை |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 1. | 19 அல்லது 21 | எந்த ஒரு மாநில *அரசாலோ அல்லது* மத்திய அரசாலோ ஏற்றவாறு *ஒப்புதல்* அளிக்கப்பட்ட திட்டத்தின் கீழ் சமுதாயத்தில் பொருளாதாரத்தில் நலிவடைந்த பிரிவினருக்கு இலவசமாக பகிர்ந்தளிக்கும் நோக்கத்திற்கான உணவு தயாரிப்புகள் அலகு கொள்கலன்களில் வைக்கப் பட்டவை. | உரிய மாநில அரசால் அல்லது மத்திய அரசால் ஏற்றவாறு ஒப்புதல் அளிக்கப்பட்ட திட்டத்தின் கீழ் சமுதாயத்தில் பொருளாதாரத்தில் நலிந்த பிரிவினருக்கு இலவசமாக அத்தகைய உணவு தயாரிப்புகளை பகிர்ந்தளித்ததின் விளைவாக உரிய மாநில அரசின் துணை செயலாளர் அல்லது இந்திய அரசின் துணை செயலாளர் படிநிலைக்கு கீழே இல்லாத ஒரு அலுவலரிடமிருந்து பெறப்பட்ட ஒரு சான்றிதழை உணவு தயாரித்து வழங்குபவர் எப்போது அளிக்கும்போது, அத்தகைய சரக்குகள் வழங்கப்பட்ட தேதியிலிருந்து ஐந்து மாத காலத்திற்குள் அல்லது மத்திய அரசின் செயல் எல்லை ஆணையரால் அத்தகைய கூடுதல் காலத்திற்குள் அல்லது மாநில அரசின் செயல் எல்லை ஆணையரால், நேர்விற்கேற்ப, இதன் தொடர்பாக அனுமதிக்கலாம். |

விளக்கம்:–

(1). இந்த அறிவிக்கையில், “கட்டண வீதப் பட்டியல் இனம்’’ ‘‘துணை–தலைப்பு’’, ‘‘தலைப்பு’’ மற்றும் அத்தியாயம்’’ என்பதன் பொருளினை சுங்க கட்டண வீதப்பட்டியல் சட்டம், 1975–ன் (மத்திய சட்டம் 1975ன் 51ல்) முதல் அட்டவணையில் குறிப்பிட்டவாறு முறையே ஒரு கட்டண வீதப் பட்டியல் இனம், தலைப்பு, துணை–தலைப்பு மற்றும் அத்தியாயம் என கொள்ள வேண்டும்.

(2) முதல் அட்டவணையின், பிரிவு, மற்றும் அத்தியாயக் குறிப்புகள் மற்றும் பொது விளக்கத்தக்க குறிப்புகள் உள்ளிட்ட சுங்க கட்டண வீதப் பட்டியல் சட்டம், 1975–ன் முதல் அட்டவணையின் விதிகளுக்கான பொருள் விளக்கமானது, இதுவரையில் இருக்கலாம் என, இந்த அறிவிக்கையின் பொருள் விளக்கத்திற்கும் பொருந்தும்.

**தமிழ்நாடு சரக்குகள் மற்றும் சேவைகள் வரிச்சட்டம், 2017–ன் கீழ் ஏற்றுமதிகளாக கருதப்பட்ட வழங்கல்கள்.**

*[அ.ஆ.நிலை எண்.. 142 வணிகவரிகள் மற்றும் பதிவுத்துறை (ஆ1), 17 அக்டோபர் 2017, புரட்டாசி 31 ஹேவிளம்பி, திருவள்ளுவர் ஆண்டு – 2048]*

**எண். II(2)/வவப /868 (ஊ-2) /2017**

தமிழ்நாடு சரக்குகள் மற்றும் சேவைகள் வரிச்சட்டம், 2017ன் கீழ் (தமிழ்நாடு சட்டம் 2017ன் 19ல்) பிரிவு 147ன் கீழ் அளிக்கப்பட்ட அதிகாரங்களை நடைமுறைப்படுத்தி, குழுவின் பரிந்துரைகளின் படி, தமிழக ஆளுநரால், ஏற்றுமதியாக கருதப்படுபவை என கீழ்கண்ட அட்டவணையின் நிரல் (2)ல் பட்டியலிடப்பட்ட சரக்குகளின் வழங்கல்களை இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது. அதாவது:–

அட்டவணை

| வ.எண். | வழங்கல்களின் விவரிப்பு |
|---|---|
| (1) | (2) |
| 1. | முன்கூட்டியே அதிகாரமளித்தலுக்கு எதிராக ஒரு பதிவு பெற்ற நபரால் வழங்கப்படும் சரக்குகள். |
| 2. | ஏற்றுமதி மேம்பாட்டு மூலதன சரக்குகள் அதிகாரமளித்தலுக்கு எதிராக ஒரு பதிவு பெற்ற நபரால் வழங்கப்படும் மூலதன சரக்குகள். |
| 3. | ஏற்றுமதி சார்ந்த அலகிற்கு ஒரு பதிவு பெற்ற நபரால் வழங்கப்படும் சரக்குகள். |
| 4. | முன்கூட்டியே அதிகாரமளித்தலுக்கு எதிராக 2017 ஜுன் 30 தேதியிட்ட அறிவிக்கை எண். 50/2017–சுங்கவரி, (திருத்தியமைக்கப் பட்டவாறு)–ல் குறிப்பிடப்பட்டவாறு ஒரு வங்கியாலோ அல்லது பொதுத்துறை நிறுவனத்தாலோ வழங்கப்படும் தங்கம். |

விளக்கம் –

இந்த அறிவிக்கையின் நோக்கங்களுக்காக,–

1. ''முன்கூட்டியே அதிகாரமளித்தல்'' என்பதன் பொருளானது, பொருள் ஏற்றுமதிகளுக்கான முன் இறக்குமதி அடிப்படையின் மீதான உள்நாட்டு உள்ளீடுகளின் கொள்முதலுக்காக அல்லது இறக்குமதிக்காக அயல்நாட்டு வர்த்தக கொள்கை 2015-20ன்அத்தியாயம்–4ன் கீழ் அயல்நாட்டு வர்த்தகத்தின் பொது இயக்குநரால் அளிக்கப்பட்ட ஒரு அதிகாரமளித்தல் ஆகும்.

2. ஏற்றுமதி மேம்பாட்டு மூலதன சரக்குகள் அதிகாரமளித்தல் என்பதன் பொருளானது பொருள் ஏற்றுமதிக்காக மூலதன சரக்குகளின் இறக்குமதிக்காக அயல்நாட்டு வர்த்தக கொள்கை 2015 –20–ன், அத்தியாயம்– 5ன் கீழ் அயல்நாட்டு வர்த்தகத்தின் பொது இயக்குநரால் அளிக்கப்பட்ட ஒரு அதிகாரமளித்தல் ஆகும்.

3. ''ஏற்றுமதி சார்ந்த அலகு'' என்பதன் பொருளானது அயல்நாட்டு வர்த்தக கொள்கை 2015–20–ன்அத்தியாயம்–6ன் விதிகளுக்கு இணங்க ஏற்றுமதி சார்ந்த அலகு அல்லது மின்னணு வன்பொருள் தொழில்நுட்ப பூங்கா அலகு அல்லது மென் பொருள் தொழில் நுட்ப பூங்கா அலகு அல்லது உயிரி–தொழில்நுட்ப பூங்கா அலகினால், ஒப்புதல் அளிக்கப்பட்டவை.

**தமிழ்நாடு சரக்குகள் மற்றும் சேவைகள் வரிச் சட்டம்– 2017ன் கீழ், திருப்புத்தொகை கோரிக்கைக்காக ஏற்றுமதியாக கருதப்படும் வழங்கல்களின்வழங்குநரால் சமர்ப்பிக்கப்பட வேண்டிய ஆதாரங்கள்**

*[அ.ஆ. நிலை எண்.143, வணிகவரிகள் மற்றும் பதிவுத்துறை (ஆ1), 17 அக்டோபர் 2017,*

*புரட்டாசி 31 ஹேவிளம்பி, திருவள்ளுவர் ஆண்டு – 2048]*

**எண். II(2)/வவப/868(ஊ-3)/2017**

2017 அக்டோபர் 18ந் தேதியிட்ட தமிழ்நாடு அரசின் அரசிதழ் அசாதாரணத்தின் பிரிவு– 2 பகுதி– II ல் வெளியிடப்பட்ட வணிக வரிகள் மற்றும் பதிவுத்துறையின் அறிவிக்கை எண். II (2)/ வவப /868 /ஊ-2/2017 உடன் படிக்கப்பட்ட, தமிழ்நாடு சரக்குகள் மற்றும் சேவைகள் வரிச்சட்டம், 2017ன் விதி–89ன் உபவிதி–2ன்,கூறு (எ)ல் அளிக்கப்பட்ட அதிகாரங்களை நடைமுறைப்படுத்தி, தமிழக ஆளுநரால், திருப்புத்தொகை கோரிக்கைக்காக ஏற்றுமதியாக கருதப்படும் வழங்கல்களின் வழங்குநரால் சமர்ப்பிக்க தேவைப்படும் ஆதாரங்களாக கீழ்காணும் அட்டவணையின் நிரல் (2ல்) விளக்கியுள்ளவாறு இதன்மூலம் பின்தொடர்பவை அறிவிக்கப் படுகிறது . அதாவது:–

அட்டவணை

| வ. எண். | ஆதாரம் |
|---|---|
| (1) | (2) |
| 1. | கூறப்பட்ட முன்கூட்டிய அதிகாரம் வைத்திருப்பவர் அல்லது ஏற்றுமதி மேம்பாட்டு மூலதன சரக்குகளின் அதிகாரம் வைத்திருப்பவரால் கூறப்பட்ட ஏற்றுமதியாக கருதப்பட்ட வழங்கல்கள் பெறப்பட்டது என ஏற்றுமதி மேம்பாட்டு மூலதன சரக்குகள் அதிகாரம் வைத்திருப்பவரால் அல்லது முன்கூட்டிய அதிகாரம் வைத்திருப்பவரின் செயல் எல்லைக்குட்பட்ட வரி அலுவலரால் நேர்விற்கேற்ப, ஒப்புதல் அளிக்கப்பட்டோ அல்லது வழங்குநரால் மேற்கொள்ளப்பட்ட அத்தகைய வழங்கல்களின் கீழான வரி விலைப் பட்டியலின் நகலானது, பெற்றுக்கொள்ளும் ஏற்றுமதி சார்ந்த அலகால் (EOU) கூறப்பட்ட ஏற்றுமதியாக கருதப்பட்ட வழங்கல்கள் அதனால் பெறப்பட்டதற்கான உரிய கையொப்பமிடப்பட வேண்டும். |
| 2. | ஏற்றுமதியாக கருதப்பட்ட சரக்குகளை பெற்றவரால் அத்தகைய வழங்கல்கள் மீதான உள்ளீட்டு வரி வரவு அவரால் துய்க்கப்படவில்லை என உறுதிமொழி அளிக்கப்பட வேண் டும். |
| 3. | ஏற்றுமதியாக கருதப்பட்ட சரக்குகளை பெற்றவரால் அத்தகைய வழங்கல்கள் தொடர்பான திருப்புத்தொகை அவரால் கோரப்படமாட்டாது மற்றும் பெறுநரால் திருப்புத் தொகை கோரப்படலாம் என உறுதிமொழி அளிக்கப்பட வேண்டும். |

முனைவர்.ச. சந்திரமௌலி,
கூடுதல் தலைமை செயலாளர் (முகூபொ)